
# இஸ்லாமிய கலை

## காட்சி கூடம் உரை மொழிபெயர்ப்புகள்




காட்சி கூடத்தின் வரைபடம்

## 1 இஸ்லாமின் வருகைக்கு முன்னர்

தற்போது இஸ்லாம் மேலோங்கி இருக்கும் பகுதிகளின் முன்னைய கலைப் பாரம்பரியங்களை, இவ்விரண்டு சிற்பங்களும் பிரதிபலிக்கின்றன. ஒரு புதிய மதம் சார்ந்த நம்பிக்கை தலையெடுக்கும் போது, ஒரு சமூகம் தம்முடைய தற்போதைய கலை மற்றும் கலாசாரத்தை முழுமையாகக் கைவிடுகிறதா? அல்லது முன்னைய பாரம்பரியங்கள் மாற்றியமைக்கப்படுகின்றனவா; மறுபடியும் புதுப்பிக்கப்படுகின்றனவா? இங்குள்ள இஸ்லாமியக் கலைக் காட்சிக்கூடம், புது வகையிலான வாழ்க்கையின்மூலம் கலை வடிவங்கள் கண்ட வளர்ச்சியை ஆய்வு செய்வதன்வழி, இந்தக் கேள்விகளுக்கு விடை காண முனைகின்றது.

## 2 பார்த்தலும் நம்புதலும்

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு, இஸ்லாமானது முகமது நபிகளிடம் திருவெளிப்பாடு கண்ட கடைசி ஆபிரகாமிய மதமாகும் (யூத மதத்திற்கும் கிறிஸ்துவ மதத்திற்கும் அடுத்தபடியாக). மெக்காவில் (தற்போதைய சவூதி அரேபியா) 570-ஆம் ஆண்டு பிறந்தவரான முகமது, இறைவனின் (அரேபிய மொழியில் 'அல்லா' என்று வழங்கப்பெறுவார்), முதல் திருவெளிப்பாட்டைப் பெற்ற பிறகு, மதினாவில் 632-ஆம் ஆண்டு (AH 10) காலமானார். அவர் காலமான காலகட்டத்திற்குள், அரேபியாவின் பெரும் பகுதியில் இஸ்லாம் பின்பற்றப்பட்டு வந்தது.

### ஐந்து தூண்கள் – வாழ்க்கை நெறி

முஸ்லிம்கள், எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் இறைவன் இருப்பதாக நம்புகின்றனர். அவர்களுடைய

அடிப்படை நெறிகள், ஐந்து தூண்களைச் சார்ந்திருக்கிறது: மதத்தை ஏற்றுப் பின்பற்றுதல் (shahada), தொழுகை, ஈகை, நோன்பு மற்றும் யாத்திரை. இஸ்லாம் ஒரு வாழ்க்கை முறையாகக் (din) கருதப்படுகிறது. அடிப்படையில், வாரிசுரிமை, அனுமதிக்கப்படும் உணவுப் பழக்கவழக்கம் உள்ளிட்ட பல அம்சங்களில், இஸ்லாம் குர்ஆனின் வழிகாட்டுதலைப் பின்பற்றுகின்றது. ஆனால், இத்தகைய பலதரப்பட்ட அம்சங்களைக் கொண்ட வாழ்க்கை முறையைப் பின்பற்றி செயல்படுத்தும் முறை, இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. இஸ்லாம், உள்ளூர் பாரம்பரியங்களுடனும் பழக்க வழக்கங்களுடனும் அடிக்கடி உறவாடி வந்தது. அதன் காரணமாக, இந்தக் கலாசாரங்களில் பலதரப்பட்ட பாணிகளிலான கலைகள் உருவாயின.

## இஸ்லாமிய உலகின் கலை

முதுமொழி ஒன்றிற்கேற்ப, 'பார்த்தல்' மற்றும் 'நம்புதல்' ஆகிய கொள்கைகளை இந்தக் காட்சிக்கூடம் மையப்படுத்துகிறது. கலை எவ்வாறு இஸ்லாமியக் கலையாகப் பார்க்கப்படுகிறது அல்லது கருதப்படுகிறது? இஸ்லாமியக் கலை குறித்து உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எண்ணங்களும், பகிர்ந்துகொள்ளப்படும் புத்தாக்கப் போக்குகளும், தனித்துவம் வாய்ந்த கலை வடிவங்களுக்கு வித்திட்டுள்ள வட்டார அளவிலான புத்தாக்கங்களுடன் அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

## கலை சார்ந்த உள்நோக்கங்கள்

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் கலை வெளிப்பாடுகளை உருவாக்கத்தில் அமைதியான உலகை எவ்வாறு பார்க்கிறார்கள்? ஒரு முனையில், அவர்கள் தங்களுடைய ஆன்மீக அடையாளங்களை வெளிப்படுத்த கலை அனுமதிக்கின்றது. மறு முனையில், இறைவனின் உருவாக்கமான உலகிலும் பிரபஞ்சத்திலும் உள்ள அழகையும் அற்புதத்தையும் வெளிப்படுத்த கலைஞர்கள் தூண்டப்படுகிறார்கள். அதன் விளைவு, இஸ்லாமியக் கலைகளாக இன்று போற்றப்படும் வண்ணமயமான திரைச்சீலையே ஆகும். இந்தக் காட்சிக்கூடம், இஸ்லாம் கிழக்கு நோக்கி பரவியதால் எழுந்த செழுமையான கலைப் பாரம்பரியங்களை, தென் கிழக்காசியாவை மையமாகக் கொண்டு ஆராய்கின்றது.

# 3 வட்டாரம்: இஸ்லாமிய தென் கிழக்காசியா

இன்றைய தென் கிழக்காசியாவில், உலகில் உள்ள முஸ்லிம்களில் 25 விழுக்காட்டினர் வசித்து வருகின்றனர். புருணை, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் முஸ்லிம் பெரும்பான்மையினரும், சிங்கப்பூர், கம்போடியா, மியன்மார், தாய்லாந்து, பிலிப்பீன்ஸ் ஆகிய நாடுகளில் கணிசமான அளவிலான முஸ்லிம் சிறுபான்மையினரும் உள்ளனர். அப்படி இருந்தும் கூட, இந்த வட்டாரத்தின் இஸ்லாமியக் கலை குறைவாகவே ஆராயப்பட்டு, போதுமான அளவு போற்றப்பட்டிருக்கவில்லை.

## ஆரம்பகாலத் தொடர்புகள்

தென் கிழக்காசியாவில் இஸ்லாமிய மதம் குறித்த ஆரம்பகால ஆதாரங்கள் முழுக் கோர்வையாக அல்லாமல்

துணுக்குகளாகவே கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால், 8-ஆம் நூற்றாண்டு காலகட்டத்திற்குள் மத்தியக் கிழக்கு, ஈரான், இந்தியா ஆகிய வட்டாரங்களிலிருந்து வந்த முஸ்லிம் வணிகர்களுடன் தொடர்பு ஏற்பட்டிருந்ததை உறுதிப்படுத்த போதுமான ஆதாரங்கள் உள்ளன. இந்த அரும்பொருளகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த Tang கப்பல் சிதைவுகள், இத்தகைய ஆரம்பகாலத் தொடர்புகளுக்கு சான்றாகும்.

## இஸ்லாமிய மதம் வேரூன்றுகிறது

ஆரம்பகாலத் தொடர்புகள் இருந்தபோதிலும், பெருமளவிலான மத மாற்றம், 13-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கியது. Marco Polo, Ibn Battuta ஆகிய புகழ்பெற்ற ஆய்வாளர்கள், தங்களுடைய 13-ஆம் மற்றும் 14-ஆம் நூற்றாண்டுகாலக்

குறிப்புகளில், சுமத்ராவின் வடக்குக் கரையோரப் பகுதியில் Perlak, Samudra-Pasai ஆகிய முஸ்லிம் சாம்ராஜ்யங்களை சந்தித்ததாக எழுதியுள்ளனர். போர்ச்சுகல் நாடு 1511-ஆம் ஆண்டில் மலாக்காவை வீழ்த்துவதற்குள், மலாக்கா செல்வச் செழிப்பு மிகுந்த பல்வள இயல்புடைய சாம்ராஜ்யமாக, பல தலைமுறை முஸ்லிம் சுல்தான்களால் நூற்றாண்டுக்கும் மேலாக ஆளப்பட்டு வந்தது. சுமத்ரா, ஜாவா, சுலவேசி, மொலுக்காஸ் ஆகிய பகுதிகளிலும் மற்ற முஸ்லிம் சாம்ராஜ்யங்களும் தலைவராட்சி கொண்ட நகரங்களும் இருந்தன.

## 4 எழுத்து வடிவ அடையாளம்

அரபு மொழியில் இயற்றப்பட்டுள்ள குர்ஆனின் பெருமதிப்பிற்குரிய நிலையால் உந்தப்பட்டு, புதிய முஸ்லிம் சமூகங்களும் தங்களுடைய

பூர்வீக மொழிகளை அரபு எழுத்து வடிவில் எழுதத் தொடங்கினர். அதன்மூலம் பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்துடன் தங்களை எழுத்து வடிவில் அடையாளப்படுத்திக்கொள்ள முனைந்தனர்.

## தென் கிழக்காசியாவில் அரபு எழுத்து வடிவம்

தென் கிழக்காசியாவில், இஸ்லாம் தீர்க்கமாகப் பின்பற்றப்பட்டு வந்த பகுதிகளில் எல்லாம், இதுபோன்ற மேம்பாடுகள் நேர்ந்தன. அவற்றுள் நன்கு அறியப்பட்ட எழுத்து வடிவம் ஜாவி - அரபு எழுத்துகளில் இயற்றப்பட்ட மலாய் மொழி. 20-ஆம் நூற்றாண்டின் மத்தியில், லத்தீன் எழுத்துகளுக்குப் பெரும்பாலானோர் மாறிய காலகட்டம் வரை, ஜாவி 600 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்பாட்டில் இருந்து வந்தது.

## ஆரம்பகாலக் கல்வெட்டுகள்

ஜாவி மொழி குறித்த ஆகப் பழமை வாய்ந்த ஆதாரம், 702-ஆம் (1303) ஆண்டைச் சேர்ந்த திரெங்காணு கல்லே ஆகும். அதில் உள்ள கல்வெட்டுகள், அவ்வட்டாரத்தின் முஸ்லிம் மன்னர் (raja mandalika) தமது மதம் சார்ந்த கடமைகளின் ஒரு பகுதியாக நிர்வகித்து வந்த அபராதங்கள் உள்ளிட்ட சட்டங்களையும் தண்டனைகளையும் விவரிக்கின்றன. இஸ்லாம் அரசுபூர்வ மதமாக நிலைபெற்றிருந்ததை இது காட்டுகின்றது.

## இஸ்லாம் எவ்வாறு தென் கிழக்காசியாவிற்குள் நுழைந்தது?

அதே காலகட்டத்தைச் சேர்ந்த அதுபோன்ற கல்வெட்டுகளும் கல்லறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களை ஆராய்கையில், இஸ்லாம் இவ்வட்டாரத்திற்குள்

இரு பாதைகளின் வழியாக நுழைந்திருக்கக்கூடும் என்பது தெரிய வருகிறது (வரைபடத்தைப் பார்க்கவும்). மேற்கிலிருந்து, மத்தியக் கிழக்கு அல்லது இந்தியாவில் உள்ள குஜராத், வங்காளம் மற்றும் கோரமண்டலக் கரையோரப் பகுதியிலிருந்து இஸ்லாம் தென் கிழக்காசியாவிற்குள் நுழைந்தது. கிழக்கிலிருந்து, தென் சீனாவில் உள்ள அரபு அல்லது பாரசீக சமூகங்களின் மூலம், இஸ்லாம் தென் கிழக்காசியாவிற்குள் நுழைந்தது.

## 5 நிலைநாட்டும் முறைமை

பல நூற்றாண்டுகளாக, தென் கிழக்காசியா முழுவதும், பெரும்பாலும் அமைதியான முறையிலேயே இஸ்லாம் பின்பற்றப்பட்டு வந்தது. இந்த வட்டாரத்தில், இஸ்லாம் ஆழமாக வேரூன்றியதற்கு ஒரு முக்கியக்

காரணம், Sufism எனப்படும் இஸ்லாமிய இறைநிலை நடைமுறையின் அறிமுகமாகும். இஸ்லாமிய போதனைகளை மேலும் சிறப்பான முறையில் மக்களிடத்தில் கொண்டு செல்ல, Sufi போதகர்கள் அப்போதிருந்த பாரம்பரியங்களை மாற்றி அமைத்துக்கொண்டனர். அவர்கள் பொதுவான ஆன்மீக விழுமியங்களில் கவனம் செலுத்திய அதே வேளையில், அவற்றை இஸ்லாமிய அம்சங்களுடன் ஒருங்கிணைத்து உள்ளூர் சமூகங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொகுத்து அளித்தனர்.

## இயற்கையிலிருந்து எழுந்த அகத்தூண்டுதல்

தென் கிழக்காசியாவில் உள்ள வெப்ப மண்டலப் பகுதிகளில் பலதரப்பட்ட தாவரங்களும் விலங்குகளும் உள்ளன. இந்த வட்டாரத்தின்

மிக முக்கியமானதொரு கலை வடிவம், மரச் சிற்பங்களை செதுக்குவதாகும். இயற்கையானது, இக்கலைக்குத் தேவையான மூலப் பொருட்களைத் தருவதோடு மட்டுமின்றி, கலை வடிவத்தின் காட்சிக் களஞ்சியத்திற்குத் அகத்தூண்டுதலாகவும் விளங்கியது. மரச் சிற்பங்கள் செதுக்குவதில் பயன்படுத்தப்பட்டு வந்த மையக் கருப்பொருள்களும் வடிவங்களும், ஜவுளி, உலோக வேலை முதலான இதரத் துறைகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்தது.

## இதர ஆதிக்கங்கள்

முன்னைய பாரம்பரியங்களான இந்து - பௌத்த மதங்கள், ஆன்ம வாதம் (அனைத்து உயிரினங்களுக்கும் ஆன்மா உண்டு என்று வலியுறுத்தும் நம்பிக்கை) ஆகியவற்றின் மரபுடைமையையும் தழுவி கலைஞர்கள் தங்களுடைய

படைப்புகளை உருவாக்கினர். இந்த வட்டாரத்தின் பன்முகத்தன்மை, கடல்வழி மக்கள் இடம்பெயரக்கூடிய தன்மை ஆகியவை முஸ்லிம் நாடுகளும் சமூகங்களும் வெளிப்புற ஆதிக்கங்களை ஏற்று ஒருங்கிணைத்துக்கொள்ள வழிவகுத்தது. பிரிட்டிஷ் மற்றும் டச்சு காலணித்துவ ஆட்சிக் காலத்தில் வெளிப்பட்ட ஐரோப்பிய அம்சங்களும் அத்தகைய வெளிப்புற ஆதிக்கங்களில் அடங்கும்.

## 6 உலகம் - அனைத்துலக இஸ்லாமிய பாணிகள்

சமூகத்தில் முஸ்லிம்கள் ஆக அதிக மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் அல்லது ஆக அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தன்மையைக் கொண்ட கலாசாரத்தால் அல்லது அத்தகைய கலாசாரத்திற்காக உருவாக்கப்படும்

கலைப் படைப்புகளே "இஸ்லாமியக் கலை" என்று வழங்கப் பெறுகின்றது. இஸ்லாமியக் கலையானது, அன்றாட, சடங்குபூர்வ, அறிவியல் சார்ந்த அம்சங்களையும் கூட உள்ளடக்குகின்றது. அது, அதனை உருவாக்கும் கலைஞர்களின் மதச் சார்புநிலையால் நிர்ணயிக்கப்படுவதில்லை. அவற்றை வாங்கியவர்களும் முஸ்லிம்களாக இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை.

## இஸ்லாமியக் கலையை நம்மால் வரையறுக்க முடியுமா?

காலப்போக்கில் பல மாபெரும் பாரம்பரியங்களும் உள்ளூர் விருப்பங்களும் தோன்றியிருந்தாலும் கூட, இஸ்லாமியக் கலை ஒட்டுமொத்த இயல்பைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. பிரதிநிதித்துவக் கலையைக் காட்டிலும் சுருக்கமான மையக்

கருத்துகளைப் பொதுவாகத் தெரிவு செய்வதும், கடுஞ் சிக்கலான அலங்காரங்களையும் மேற்பரப்பில் விரிவான அலங்காரத்தையும் நாடும் போக்கும் அவற்றுள் அடங்கும்.

## எல்லைகளைக் கடத்தல்

பகிர்ந்துகொள்ளப்படவல்ல மதமானது, இடம்பெயரும் தன்மைக்குத் துணை புரிகின்றது. ஆதலால், கலைஞர்களை ஓர் அரசவையிலிருந்து இன்னோர் அரசவைக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் முஸ்லிம் சாம்ராஜ்யங்களால் தொலைதூரப் பகுதிகளிலும் கூட கலாசார ஆதிக்கத்தை செலுத்த முடிந்தது. வணிக வண்டிகளும் கப்பல் இணைப்புகளும், விற்பனைப் பொருட்கள் பரந்த பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுவதை உறுதி செய்தன. இந்தப் போக்கு, உள்ளூர் கலைஞர்கள் பலதரப்பட்ட வடிவங்களையும் பாணிகளையும்

பின்பற்றத் தூண்டியது. மேலும், மெக்காவில் ஆண்டுதோறும் ஹஜ் புனித யாத்திரையின் பேரில் ஒன்றுகூடும் அனைத்துலக முஸ்லிம் சமூகம், கலை சார்ந்த எண்ணங்களும் போக்குகளும் பரவுவதற்கு ஒரு தளத்தை அமைத்துக் கொடுத்தது.

## 7 உருவம் இல்லையா?

இஸ்லாமிய மதத்தின் முக்கியக் கூறுகளில் ஒன்று tawhid – இறைவன் ஒருவரே என்ற நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் கண்டிப்பான போக்கு, உயிருள்ளவர்களை எந்தவொரு கலைப் படைப்பிலும் சித்தரிக்கும் வழக்கத்தைத் தடை செய்ய முற்படுகிறது. ஏனெனில், அவ்வாறு சித்தரிக்கும் கலைஞர், படைப்பாற்றலைக் கொண்ட ஒரே ஒருவரான இறைவனின் நிலையை எதிர்ப்பதாகப் பொருள்படும். மனித

உருவங்கள், விலங்குகள் ஆகியவை மதச் சார்பற்ற சூழல்களில் மட்டும் சித்தரிக்கப்படவேண்டும் என்பது இன்னொரு பரவலான கருத்து.

## உள்ளடக்கம் மற்றும் சூழல்

இந்த விவாதத்தின் மையக் கருத்தாய் அமைவது, உருவங்களானவை உருவ வழிபாட்டிற்கு வழிவகுத்துவிடும் என்ற அக்கறையே ஆகும். அது, இஸ்லாமிய மதத்தில் கடுமையான பாவங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. உருவங்களை உருவாக்குவதால் ஏற்படும் அனுகூலங்கள் மற்றும் தாக்கங்கள் குறித்து பலதரப்பட்ட சட்ட அபிப்பிராயங்கள் (fatwa) இஸ்லாமிய உலகில் இருந்து வருகின்றன. இந்த விவகாரம் மிகவும் சிக்கலான ஒன்று என்பதால், இதற்கு எந்தவொரு தெளிவான தீர்வும் இல்லை. உருவங்களின் உள்ளடக்கத்தையும், அது பயன்படுத்தப்படும் சூழலையும்

கருத்தில் கொண்டே பல அம்சங்கள் விவாதிக்கப்படுகின்றன.

## வரையலாமா கூடாதா?

உண்மை என்னவெனில், இஸ்லாமிய உலகில் பலதரப்பட்ட சூழல்களில் உருவகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பேழையில் உள்ள பொருட்கள் சித்தரிப்பதைப் போன்று, கலைஞர்கள் மேற்குறிப்பிட்ட அக்கறைகளைக் கருத்தில் கொண்டு பலதரப்பட்ட உத்திகளைக் கையாளுகின்றனர். உருவகங்களை அதி நவநாகரிகமான, சுருக்கமான வடிவங்களில் சித்தரிப்பது ஓர் உத்திமுறையாகும். ஆனால், 16-ஆம் நூற்றாண்டு முதல், விலங்குகளையும் மனிதர்களையும் சித்தரிப்பதில் கூடுதல் யதார்த்தப் போக்கு பின்பற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக, ஈரானிய, மொகாலய இந்திய ஜவுளிகள், ஓவியங்கள்,

கம்பளங்கள் ஆகியவற்றிலும், ஒட்டோமான் சாம்ராஜ்யத்தில் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்கள், ஓடுகள், துணிகள் ஆகியவற்றிலும் இந்தப் போக்கு காணப்படுகிறது.

## 8 பூப்பின்னல் சித்திர வேலைப்பாடு மற்றும் வடிவவியல்

பூப்பின்னல் சித்திர வேலைப்பாடும் வடிவவியல் சார்ந்த வடிவங்களுமே இஸ்லாமியக் கலையுடன் தொடர்புடைய முன்னணிக் காட்சி வடிவங்களாகும். பொதுவாக, அவை tawhid கோட்பாட்டிற்கான புத்தாக்கத் தீர்வுகளாகக் கருதப்படுகின்றன. பூப்பின்னல் சித்திர வேலைப்பாடு, இலைகளையும் சுழலும் இடைப்பின்னல் காம்புகளையும் அடிப்படையாகக் கொண்ட வடிவங்களைக் குறிக்கின்றது. இந்த வேலைப்பாட்டின் உருவாக்கங்கள்,

மிகவும் நேர்த்தியான, ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட சுருண்டு விரியும் வடிவங்களைக் கொண்டுள்ளது. இத்தகைய வடிவங்களை, பலதரப்பட்ட ஊடகங்களில், எந்த அளவிலான மேற்பரப்பிலும் கூட, எல்லையின்றி விரிவுபடுத்தலாம்.

## வட்டங்களும் சதுரங்களும்

வடிவவியல் வடிவங்களை உருவாக்க, இஸ்லாமியக் கலைஞருக்கு வட்டம் வரை கருவியும், வட்டம், சதுரம் ஆகிய அடிப்படை வடிவங்களை வரைவதற்கான வரைகோலும் மட்டுமே தேவைப்படுகிறது. இவ்விரண்டு வடிவங்களையும் சமமாகக் கூறிட்டு, ஒன்றன்மேல் ஒன்றை வைப்பதன் வழி, அதனூடான பலதரப்பட்ட வடிவவியல் வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன.

### சிக்கலான, தனித்துவம் வாய்ந்த வடிவங்கள்

வானியல், வடிவவியல், கணிதம் ஆகிய துறைகளில் இஸ்லாம் அடைந்த முன்னேற்றத்தின் மூலம் பயனடைந்த கலைஞர்கள், சுருளும் இலைக் கொடிகள் சார்ந்த வடிவங்களையும், அடுக்கு வடிவவியலையும் விரிவுபடுத்தி மேன்மேலும் நேர்த்தியான, நயமான, அடர்த்தியான அடுக்கு வடிவங்களை உருவாக்கினர்.

## 9 பாரம்பரியங்களும் புத்தாக்கங்களும்

அரபு நாடுகளில் 7-ஆம் நூற்றாண்டில் வேரூன்றியது முதல், இஸ்லாம் உலகம் முழுவதிலும் உள்ள பல வட்டாரங்களுக்கு, பல காலங்களாகப் பரவி வந்துள்ளது. இத்தகைய விரிவான பரவலினால், உள்ளூர் மற்றும்

வட்டார ஆதிக்கங்களின்மூலம், இஸ்லாமியக் கலையில் பல வகைகளும் பன்முகத்தன்மையும் முக்கிய அங்கம் வகிக்கின்றன. அத்துடன், இஸ்லாமியக் கலை வெற்றுத்தளத்திலிருந்து உதிக்கவில்லை. அது, தாம் இருந்த இடத்திற்கேற்ப, அங்கிருந்த முன்னைய கலைப் பாரம்பரியங்களிலிருந்து உதித்தது.

## உத்திமுறைகளின் மேம்பாடு

இங்குள்ள இஸ்லாமிய மட்பாண்டங்கள், கண்ணாடி உள்ளிட்ட பொருட்கள், அதிக பிரசித்தி பெற்ற சிலவகை பாணிகளையும் வடிவங்களையும் சித்தரிக்கின்றன. சில நேரங்களில், பரந்த இஸ்லாமியக் கலை உலகில் ஏற்படும் புத்தாக்க உணர்ச்சிகள், புதிய தொழில்நுட்பங்களுக்கு வழிவிட்டுள்ளன. மட்பாண்டங்களில்

உலோகப் பூச்சு கலக்கப்பட்டது அவற்றுள் ஒன்று.

## புதிய மூலப்பொருட்கள்

மற்ற தருணங்களில், முஸ்லிம் சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஒரு வட்டாரத்திலிருந்து மற்றொரு வட்டாரத்திற்குப் பரவி, அந்தந்த வட்டாரத்திற்குத் தகுந்தவாறு மாறியபோது அல்லது புதுப்பிக்கப்பட்டபோது புதிய கலாசாரப் பாரம்பரியங்கள் தோன்றின. அதன் காரணமாக, புது வகையான கலைப் படைப்புகளுக்குத் தேவை ஏற்பட்டது. இஸ்லாமிய நாள்காட்டியின் முதல் மாதமான முஃகர்ரம் மாதத்தின் பத்தாவது நாளான அஷூரா நோன்பைக் குறிக்கும் ஊர்வலங்களுக்காக உருவாக்கப்படும் கலைப் படைப்புகளில் இப்புதிய

கலாசாரப் பாரம்பரியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 10 ஆன்மீகம்: வாசித்தல் மற்றும் எழுதுதலின் முக்கியத்துவம்

தேவ தூதரான கேப்ரியல், நபித்துவத்தின் தருவாயில் வீற்றிருந்த முகமது அவர்களை அணுகி, அவரை வாசித்து, ஒப்பித்து, அறிவிக்கும்படி கட்டளையிட்டார். ஒருபோதும் அவை பற்றி கற்பிக்கப்படாத காரணத்தால், முகமது அவர்கள் தம்மால் இயலாது என பதிலளித்தார். அதன்பின்னர், கேப்ரியல் முகமது அவர்களை இறுக்கமாக நெருக்கிப் பிழிந்தார். இதனால் முகமது அவர்கள் தமது பலம் அனைத்தும் தம்மை விட்டு வெளியேறியதை உணர்ந்தார். பின்னர், கேப்ரியல் முன்னர் இட்ட கட்டளையை மீண்டும் இருமுறை

அறிவித்தார். மீண்டும், முகமது அவர்கள் தம்மால் இயலாது என்று பதிலளித்தார். இறுதியில், தேவ தூதர் குர்ஆனின் முதல் வரிகளை முகமது அவர்களிடம் வெளியிட்டார்.

> (யாவற்றையும்) படைத்த
> உம்முடைய இறைவனின்
> திருநாமத்தைக் கொண்டு
> ஓதுவீராக
> ‘அலக்’ என்ற நிலையிலிருந்து
> மனிதனை படைத்தான்
> ஓதுவீராக: உம் இறைவன்
> மாபெரும் கொடையாளி.
> அவனே எழுது கோலைக் கொண்டு
> கற்றுக் கொடுத்தான்.
> மனிதனுக்கு அவன்
> அறியாதவற்றையெல்லாம்
> கற்றுக் கொடுத்தான்.
>
> குர்ஆன் 96: 1–5, அல்-அலக்

## எழுத்துக்கலையின் சிறப்பு

முஸ்லிம்கள் வாசிப்பதிலும், எழுதுவதிலும், அறிவை நாடுவதிலும் கொண்டிருக்கும் உயரிய மதிப்பிற்கான அடித்தளத்தை முதல் வெளிப்பாடு அமைத்துக் கொடுத்தது. முன்பு வாய்வழி பாரம்பரியங்கள் ஊறிப்போயிருந்த கலாசாரத்திற்கு மாறாக, இன்று நாம் அறியும் அரபு எழுத்துருக்களை நிறுவிய புதியதொரு கலாசாரத்தை இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வே தூண்டியது. எழுத்துருக்களுக்கான மரியாதை அளவிடற்கரிய ஒன்றாக அமைந்திருந்தது. அதன் காரணமாக, இஸ்லாமிய உலகில், கையெழுத்துக் கலை ஆக உயரிய, உன்னதமான வெளிப்பாட்டு அம்சங்களாகக் கருதப்படுகின்றது.

## 11 முத்திரை பதித்தல்

இறைவனின் வார்த்தையாகக் கருதப்படும் குர்ஆன் முஸ்லிம்களுக்குப் புனிதத்தன்மை வாய்ந்தது. தொடக்கத்தில், குர்ஆன் (அரபு மொழியில் “வாசிக்கப்படுதல்”) மனனம் செய்யப்பட்டு, வாய்வழி பரிமாறிக் கொள்ளப்பட்டது. 632-ஆம் ஆண்டில் முகமது நபிகள் காலமான பிறகு, huffaz என்றழைக்கப்படும் முஸ்லிம்களிடையே அது நிலைத்திருந்தது.  அவர்கள் அதனை முழுமையாக மனனம் செய்திருந்தனர்.

### உரை மூலத்தைத் தரப்படுத்துதல்

அரேபிய தீபகற்பம் முழுவதும் உள்ள பல்வேறு இனத்தவரிடையிலும் மொழியினரிடையிலும் இஸ்லாம் பரவி வந்ததால், குர்ஆனின் மூல வாசகங்களைத் தரப்படுத்தவேண்டிய கட்டாயம்

நிலவியது. முகமது நபிகளின் வாரிசாகக் கருதப்படும், முஸ்லிம்களின் மூன்றாவது தலைவரான உத்மான் (ஆட்சிக் காலம் 644 முதல் 656 ஆண்டு), தரப்படுத்தும் முறைக்கு ஆணை பிறப்பித்தார். அதனை அடுத்து, குர்ஆனில் உள்ள 114 அத்தியாயங்களும் (முதல் அத்தியாயத்தைத் தவிர) தத்தம் அளவின் அடிப்படையில் இறங்குமுகமாக வரிசைப்படுத்தப்பட்டன. அப்போது முதல், குர்ஆனின் வாசகங்கள் மாறாமல் இருந்து வந்துள்ளன. ஆனால், அதன் இயற்பொருள் வடிவம், இஸ்லாமிய உலகம் முழுவதிலும் பலதரப்பட்ட மூலப் பொருட்களில், அளவுகளில், பாணிகளில் இருந்து வருகின்றன.

## கல்வெட்டுகளும் கலை சார்ந்த நூல்களும்

அரேபிய எழுத்துக்கள் மற்றும் கையெழுத்துக்கலை பாணிகளின் வளர்ச்சிக்கு குர்ஆனின் நகலாக்கம் தூண்டுகோலாக விளங்கியது. 9-ஆம் நூற்றாண்டு முதல், வரைதோலுக்குப் பதிலாக விலை குறைவான காகிதம் புழக்கத்திற்கு வந்தது. அதன் காரணமாக, ஒரு பக்கத்தில் வெளியிடப்படக்கூடியவற்றுக்குப் புதிய கோணங்கள் உருவெடுத்தன. புதிய உருளை வடிவிலான எழுத்துக்கள், வேகமான நகலாக்கத்திற்குத் துணை புரிந்தன. இத்தகைய மேம்பாடுகள், விளக்கப்படம், ஒளியூட்டம், புத்தகப் பிணைப்பு போன்ற புத்தகம் சார்ந்த கலைகளின் மேம்பாட்டிற்கும் துணை புரிந்தன.

இஸ்லாமியக் கையெழுத்துக் கலையின் அழகியல் சார்ந்த கோட்பாடுகளின் முக்கியக் கூறுகளை, பாக்தாத்தில் இருந்த அபாஸித் அரசவையின் உயர் அதிகாரியான Ibn Muqla (886 முதல் 940 ஆண்டு வரை) நிறுவினார். ஒரு புள்ளி, அலிஃப் (அரபு எழுத்துகளில் முதலாம் எழுத்து), வட்டம் ஆகியவற்றைக் கொண்டு விகிதாச்சார அடிப்படையிலான கையெழுத்து முறையை அவர் அறிமுகப்படுத்தினார். துரதிர்ஷ்டவசமாக, Ibn Muqla-வின் எந்தவொரு படைப்பும் நிலைத்திருக்கவில்லை.

## புள்ளிகளும் வட்டங்களும்

கோரைப்புல் பேனாவின் கூர்நுனியால் இடப்படும் ஒரு புள்ளி, ஓர் அடிப்படை அளவீடாக விளங்கிற்று. அங்கிருந்து, குறிப்பிட்ட

எண்ணிக்கையிலான புள்ளிகள், ஆக உயரமான, செங்குத்து எழுத்தான அலிஃப்-பின் உயரத்தை நிர்ணயிக்கின்றது. இது, ஒரு வட்டத்தின் குறுக்களவாகவும் திகழ்கின்றது. அலிஃப் எழுத்தின் உயரத்தையும் அது உருவாக்கும் வட்டத்தையும் கொண்டு, இதர எழுத்து வடிவங்களின் விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

## பிரசித்திபெற்ற கையெழுத்துக் கலைஞர்கள்

கையெழுத்துக் கலையின் உயரிய நிலைக்கு ஏற்ப, கையெழுத்துக் கலைஞர்களுக்கும் ஆக உயரிய மதிப்பு அளிக்கப்பட்டது. கையெழுத்துக் கலைஞர் நல்ல குணம் படைத்தவராக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரேபிய

முதுமொழி ஒன்று கூறுவதைப் போன்று, “புனிதமான கையெழுத்து, புனிதமான ஆன்மாவிற்கு ஈடானது”. தெளிவான, நேர்த்தியான, அழகான கையெழுத்து உடையவர்கள் அதிகம் நாடப்பட்டார்கள். காகிதப் படைப்புகளுக்கு மட்டுமின்றி, கற்கள், உலோகங்கள், ஜவுளிகள் ஆகியவற்றிற்கு மாற்றக்கூடிய படைப்புகளை உருவாக்கவும் அவர்கள் நாடப்பட்டனர். பெரும்பாலும், அவர்கள் அரசவைக் குடும்பத்தினரால் அல்லது செல்வந்தர்களால் பணிக்கப்படுவார்கள். தலைசிறந்த திறனாளர்கள், புத்தகத் தயாரிப்பு மற்றும் இதர எழுத்துப் படைப்புகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அரண்மனைப் பிரிவுகளால் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

# 13 சொல்லும் உருவமும்

முஸ்லிம் மேன்மக்கள், எழுத்தறிவின் முக்கியத்துவத்தினால் தூண்டப்பட்டு, குர்ஆன் தவிர்த்து இதர நூல்களையும் அறிவுப் பசியுடன் நாடினர். வரலாறு, அறிவியல் மற்றும் கவிதை, காதல் கதைகள், இதிகாசங்கள் ஆகியவை சார்ந்த இலக்கியப் படைப்புகள் அடிக்கடி இயற்றப்பட்டன. நூல்கள் பொதுச் சந்தையில் விற்கப்பட்டன. ஆனால், விளக்கப்படங்களும் ஒளியூட்டமும் கொண்ட கையெழுத்துப் பிரதிகள் மிகவும் விலை உயர்ந்தவையாக இருந்தன. எனவே, ஆகப் பகட்டான நூல்கள் அரசவைப் பட்டறைகளில் தயாரிக்கப்பட்டன. கலை வெளிப்பாடுகளின், குறிப்பாக சிற்றுரு ஓவியங்களின் வளர்ச்சிக்கு இத்தகைய கையெழுத்துப் பிரதிகள் முக்கிய ஊடகங்களாக விளங்கின.

## எழுதுவதன் வழி பிறந்த கலை

ஓவியர்களுடனான கூட்டு முயற்சி தேவைப்படுகின்ற விளக்கப்படம் அல்லது ஒளியூட்டத்துடன் கூடிய கையெழுத்துப் பிரதிகள் தவிர்த்து, கையெழுத்துக் கலைஞர்கள் தாங்களாகவே மூல வாசகங்களை மாற்றியமைப்பதற்குத் தேவையான அழகியல் கூறுகளை விரிவுபடுத்தத் தொடங்கினர். குறிப்பாக, இதர ஊடகங்களுக்கு வடிவமாக ஒற்றைத் தாளில் படைப்புகளை உருவாக்கும்படி அவர்கள் பணிக்கப்பட்டபோதே இவ்வாறு நடந்தது.

## Calligrams (கையெழுத்துக் கலையின் ஒரு பரிமாணம்)

கையெழுத்துக் கலையின் மிகப் பிரபலமான பயன்பாடுகளில் ஒன்று calligram – இதில் எழுத்துக் கீற்றுகள் நீட்டிக்கப்பட்டும், முறுக்கப்பட்டும், திருப்பப்பட்டும், சுழற்றப்பட்டும்

ஓர் உருவம் உருவாக்கப்படுகிறது. இத்தகைய படைப்பு, கையெழுத்துக் கலைஞரின் கைத்திறன், படைப்பாற்றல், மென்மை, இயல்பான திறன் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றது.

## 14 இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலை: இவ்வுலகும் அதற்கு அப்பாலும்

ஆழமானதோர் ஆன்மீகப் பாதையில், மதச் சார்புடைய அடையாளச் சின்னங்களாகப் பல வகையான கலை வெளிப்பாடுகள் தோன்றி வளர்ந்தன. ஆனால், இயற்கையிலும் இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றிலும் கவனித்து, புரிந்துகொள்ளப்பட்ட அம்சங்கள், கையெழுத்துப் பிரதிகள், கருவிகள் முதல் இஸ்லாமியப் பொருட்கள், தாயத்துகள் வரை பலதரப்பட்ட மூலப் பொருட்களில் உன்னிப்பாகவும் அழகாகவும் சித்தரிக்கப்பட்டன.

## அறிவுத்திறன் மீதான நாட்டம்

இதற்கு அடிப்படையாய் திகழ்வது 'ilm' என்று வழங்கப்பெறும் அரேபியச் சொல்லாகும். இச்சொல் "அறிவு" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இது குர்ஆனிலும் ஹதீத்திலும் (முகமது நபிகளின் பதிவு செய்யப்பட்ட பாரம்பரியங்கள்) பல இடங்களில் காணப்படுகிறது. ஆன்மீகத்திலும் உலகளவிலும் அறிவாற்றலுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது. 'Ilm' என்ற சொல்லின் முழுமையான அர்த்தம் சிக்கலானது; பன்முகத்தன்மை வாய்ந்தது. அது, கற்றலின் பகுத்தறிவு மற்றும் உணர்வுபூர்வ அம்சங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. அவற்றுள், புலன் உணர்வு, கண்டறிதல், உள்நோக்கு, உய்த்தறிதல், பட்டறிவு, உள்ளுணர்வு, உத்வேகம் ஆகியவையும் அடங்கும்.

## இஸ்லாமிய உலகில் அறிவியல்

வரலாற்று ரீதியாக, அரேபிய மொழியில் ‘அறிவியல்’ என்ற சொல்லுக்குத் தனிப்பட்ட சொல் இருந்ததில்லை. அதற்குப் பதிலாக, கற்கப்படும் பொருளுடன் ‘ilm’ என்ற சொல்  தொடர்புபடுத்தப்பட்டு, பலதரப்பட்ட அறிவியல் வகைகளுக்குப் பெயரிடப்பட்டது. உதாரணமாக, “மனிதர்கள் குறித்த அறிவு” (‘ilm al-insan) மானிடவியலைக் குறிக்கின்றது; “உயிர் குறித்த அறிவு” (‘ilm al-hayah) உயிரியலைக் குறிக்கின்றது. ஆனால், இந்த வகையான பெயரிடும் முறை, பகுத்தறிவிற்கும் அறிவியலுக்கும் அப்பாற்பட்ட பிற வகையிலான அறிவுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ்விரு வகையான அறிவுத் தேடலுக்கும் கலை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை இப்பகுதி ஆராய்கிறது.

## 15 இடம், நேரம் மற்றும் காரியம்

இஸ்லாமின் இரண்டாவது தூண், ஒரு நாளில் ஐந்து முறை தொழுகை (Salat) மேற்கொள்வதாகும். கண்காணிக்கவல்ல வானியல் நிகழ்வுகளே தொழுகை நேரங்களை நிர்ணயிப்பதற்கான வழிகாட்டிக் குறிப்புகள். எனவே, துல்லியமான நேரங்கள் இடத்திற்கும் காலத்திற்கும் தகுந்தவாறு மாறும். மேலும், தொழுகையை மேற்கொள்ள, எத்திசையில் மெக்கா நோக்கிப் பார்க்கவேண்டும் என்று (கணிக்கிட) ஒருவருக்குத் தெரிந்திருக்கவேண்டும். தொழுகைக்குரிய திசை 'கிப்லா' என்று அழைக்கப்படுகிறது.

## ஹிஜிரா ஆண்டுகள்

சந்திர சுழற்சியின் அடிப்படையில் புதிய இஸ்லாமிய நாள்காட்டியான ‘ஹிஜிரா’ உருவாக்கப்பட்டது. முகமது நபிகளும் அவரைப் பின்பற்றி வந்தவர்களும் மெக்காவிலிருந்து மதீனாவிற்குப் புறப்பட்ட ஆண்டிலிருந்து (கி.பி. 622-ஆம் ஆண்டு) இந்த நாள்காட்டி தொடங்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் உள்ள ஆண்டுகள் ‘AH’ அல்லது ‘H’ எனக் குறிக்கப்படும்.

## மத நம்பிக்கையும் அறிவியல்களும்

மதம் சார்ந்த கடமைகளை நிறைவேற்றிட இத்தகைய கணக்கீடுகளும் தீர்மானங்களும் செய்யவேண்டிய அவசியத்தால், இவை சார்ந்த கல்வியறிவை மேம்படுத்துவதிலும் அக்கறை காட்டப்பட்டது. முன்னைய கிரேக்க மற்றும் இதர

மூல வாசகங்களிலிருந்து கற்றுக்கொண்டதன் வழி, இடைக்கால இஸ்லாமிய அறிஞர்கள் வடிவவியல் மற்றும் கணிதத்தின் மற்ற பிரிவுகளுடன், வானியலையும் மேம்படுத்தினர். ‘Ilm’ (அறிவு) என்ற சொல்லிலிருந்து பிறந்ததுதான் ‘alam’. அதற்கு ‘அறிகுறி’ என்று பொருள். இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் இறைவனிடமிருந்து உலகிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாகத் தெரிவிக்கப்படும் அறிகுறிகளைக் கவனிக்கவேண்டும் என்று குர்ஆனில் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். எனவே, இயற்கை மற்றும் மருத்துவ அறிவியல்கள் போன்ற உலக அறிவைப் பெறவேண்டி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், இத்தகு அறிகுறிகளை பகுத்தறிவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகவே கருதப்படுகின்றன.

## 16 மந்திரத்தன்மை மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலை

நிகழ்வுகளும் இருப்புநிலையும் எவ்வாறு வடிவமைக்கப்படுகின்றன அல்லது தூண்டப்படுகின்றன என்பதை அறிந்துகொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் உரிய அவா மனிதர்கள் அனைவரிடத்திலும் உள்ள ஒன்றாகும். குறிப்பாக, நோய், பேரிடர் அல்லது சிரமங்களை எதிர்கொள்ளும்போது, நாம் எவ்வாறு செயல்படவேண்டும் அல்லது விளக்கமளிக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ள முனைவோம். தொட்டுணர முடியாத, மறைமுகமான அல்லது இயற்கை நிலைக்கு அப்பாற்பட்ட சக்திகளே அடிக்கடி குறை கூறப்படுகின்றன. அத்தகைய குறைகூறல்களுடன், இதுபோன்ற

சக்திகளைப் பயன்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான பரிந்துரைகளும் முன் வைக்கப்படுகின்றன.

## மத நம்பிக்கையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையும்

இஸ்லாமிய உலகில், இதுபோன்ற சிந்தனைகளும் பழக்க வழக்கங்களும் பரவலானவையே. கண்களுக்குப் புலப்படாத அம்சங்களின் பேரில், அவர்கள் அடிக்கடி இறை உதவி நாடுவதுண்டு. இதன் நிலைப்பாடும் ஏற்புடைமையும் இடத்திற்கு இடம் மாறுபடும். ஆனால், சர்ச்சைகளானவை இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலை இருப்பது தொடர்பான நம்பிக்கையில் எழவில்லை. அதற்கு மாறாக,

இறைவனை மட்டுமே தொழுது உதவி நாடாமல், இத்தகைய ஆன்மாக்களின் உதவியை நாடிச் செல்வது குறித்து அக்கறை எழுந்தது.

## இதர மாறுபட்ட பழக்க வழக்கங்கள்

ஜோதிடம், எண் கணிதம், கனவுகளையும் சகுணங்களையும் பகுத்தறியும் போக்கு ஆகியவை அதிகப் பிரபலமான இதர பழக்க வழக்கங்களாகும். இஸ்லாமிய ஜோதிடர்கள் பலர், இஸ்லாமிய அரசவைகளில் ஆலோசகர்களாகப் பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்களில் பலரும் கைதேர்ந்த கணித மேதைகளாக அல்லது அறிவியலாளர்களாக விளங்கினர்.